பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

09 12 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கைவினைக் கலைஞர்களுக்கான விருதை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.
2. இந்தியாவுக்கு எதிராக செயல்பட்ட தீவிரவாத அமைப்புகளை இங்கிலாந்து தடை செய்ததற்கு மத்திய அரசு வரவேற்பு தெரிவித்துள்ளது.
3. தமிழகத்தில் ரயில்கள் இயக்கம் தொடர்பாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவை சந்தித்து கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
4. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு இந்தியா சார்பில் அனுப்பப்பட்ட மேலும் 700 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்கள் நேற்று திரிகோணமலையை சென்றடைந்தது.
5. இந்தியா - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி கட்டாக்கில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கைவினைக் கலைஞர்களுக்கான விருதை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்குகிறார்.

கடந்த 2023-24ஆம் ஆண்டில் கைவினை தொழில்துறையில் சிறப்பாக பங்காற்றியவர்களை கௌரவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது.

நமது நாட்டின் கைவினை தொழில் பாரம்பரியத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுவதாக மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

நாடாளுமன்ற நூலகக் கட்டிடத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில், தேசிய ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்த மக்களை, மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிராக செயல்பட்ட தீவிரவாத அமைப்புகளை இங்கிலாந்து தடை செய்ததற்கு மத்திய அரசு வரவேற்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், இதுபோன்ற தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் நடவடிக்கைகள் இந்தியா மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவது மட்டுமின்றி உலக நாடுகளையும் அச்சுறுத்துவதாகும் என்று கூறினார்.

இந்த தடை மூலம் அவர்களுக்கான நிதி பரிவர்த்தனை முடக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், சீனாவுக்கு பயணம் மேற்கொள்ளும் இந்தியர்கள் அந்நாட்டின் விமானப் போக்குவரத்து விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சீனாவிற்கோ அல்லது அந்நாட்டின் வழியாகவோ செல்லும் இந்தியர்கள் உரிய எச்சரிக்கையுடன் இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அதேபோல் சீன விமான நிலையங்கள் மூலம் மற்ற நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் இந்தியர்கள் மீது சீனா தேவையின்றி நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

அருணாச்சலப்பிரதேசம் சீனாவின் ஒரு பகுதி என்று பாகிஸ்தான் கூறிய கருத்துக்கு மறுப்பு தெரிவித்த திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் அம்மாநிலம் இந்தியாவின் ஒரு பகுதி என்று குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டில் அதிகரித்து வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை உள்நாட்டு சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், கடந்த ஆண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2 கோடியே 5 லட்சமாக அதிகரித்தது என்று கூறினார்.

அதே காலகட்டத்தில் 8 கோடியே 46 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவானதாகவும் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் குறிப்பிட்டார்.

<<<<>>>>

சிறுபான்மையினர் மேம்பாட்டு நிதி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் வாயிலாக கடந்த நிதியாண்டில் 860 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், நாடு முழுவதும் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் தயாரிப்புகளை சந்தைப் படுத்துவதற்கு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதாகவம் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் ரயில்கள் இயக்கம் தொடர்பாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவை சந்தித்து கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், சில ரயில் நிலையங்களில் விரைவு ரயில்களை நிறுத்தம் செய்தல், கரூர் மாவட்ட சுற்று வட்டார தொழில்களுக்கு சாதகமான வகையில் புதிய ரயில்களை இயக்குதல், புதிய வந்தே பாரத் ரயில்களுக்கான கோரிக்கைகள் மற்றும் பாதை மாற்றம் தொடர்பாக மக்கள் நலக் கோரிக்கைகள் குறித்து ரயில்வே அமைச்சரிடம் எடுத்துரைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினர் திரு. தம்பிதுரை, மாநில முன்னாள் அமைச்சர் திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோருடன் இணைந்து தாம் ரயில்வே அமைச்சரை சந்தித்ததாக டாக்டர் எல். முருகன் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு இந்தியா சார்பில் மேலும் ஆயிரம் டன் நிவாரணப் பொருட்கள் அந்நாட்டுக்கு அனுப்பட்டுள்ளது.

INS Gharial கப்பல் மூலம் அனுப்பப்பட்ட மேலும் 700 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்கள் நேற்று திரிகோணமலையை சென்றடைந்தது.

இதன் மூலம் இந்தியாவில் இருந்து இதுவரை மொத்தம் ஆயிரத்து 58 மெட்ரிக் டன் அளவுக்கு நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிராவைச் சேர்ந்த தொழிலாளர் மற்றும் சமூகநீதி இயக்க ஆர்வலர் டாக்டர் பாபா ஆதவ் புனேயில் நேற்று காலமானார். அவருக்கு வயது 95.

ஒடுக்கப்பட்டோர், அமைப்புசாரா மற்றும் விளிம்பு நிலை சமூகத்தினர், தொழிலாளர்கள் ஆகியோரின் உரிமைக்காக தமது வாழ்நாளை அவர் அர்ப்பணித்தார்.

அவரது மறைவுக்கு மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ், துணை முதலமைச்சர் திரு. அஜித் பவார், மகாராஷ்டிரா காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. ஹர்ஷ்வர்தன் சப்கல் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

விமான சேவைகளை ரத்து செய்தது தொடர்பாக இண்டிகோ நிறுவனம் அளித்துள்ள விளக்கம் குறித்து சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் பரிசீலித்து வருவதாக விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து டிடி நியூஸ் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர், பயணிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தியதை கருத்தில் கொண்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

இண்டிகோ நிறுவனம் தற்போது 2 ஆயிரத்து 200 வழித்தடங்களில் விமானங்களை இயக்கி வரும் நிலையில் தற்போது அதைக் குறைத்து மற்ற விமான சேவை நிறுவனங்களுக்கு அளிக்கப்படுவது குறித்து அரசு திட்டமிட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

விமான சேவை நாளை முதல் முழுவதுமாக இயல்பு நிலைக்கு திரும்பும் என்று அவர் தெரிவித்தார்.

பயணிகளின் பாதுகாப்பு குறித்து அரசு கண்காணிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

இதற்கிடையே இச்சம்பவம் குறித்து விளக்கம் அளித்துள்ள இண்டிகோ நிறுவனம், விமான சேவை ரத்து செய்யப்பட்டதால் பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்திற்காக மன்னிப்பு கோருவதாக கூறியுள்ளது.

எதிர்பாராத பல்வேறு காரணங்களால் விமான சேவை ரத்து செய்யப்பட்டதாக அது தெரிவித்துள்ளது.

இந்நிலையில் விமானங்கள் ரத்து செய்யப்பட்டதை அடுத்து இதுவரை 827 கோடி ரூபாய் பயணக் கட்டணம் திரும்ப வழங்கப்பட்டுள்ளதாக இண்டிகோ நிறுவனம் கூறியுள்ளது.

நேற்று ஆயிரத்து 800க்கும் மேற்பட்ட விமானங்கள் வழக்கமான அட்டவணையின்படி இயக்கப்பட்டதாகவும் இண்டிகோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக தமிழகத்திற்கான சிறப்பு வாக்காளர் பட்டியல் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

அதன்படி திரு. ராமன் குமார், திரு. குல்தீப் நாராயண், திரு. நீரஜ் கர்வால், திரு. விஜய் நெஹ்ரா ஆகிய நான்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அதிகாரிகள் மாநிலம் முழுவதும் நடைபெறும் கணக்கீட்டுப் பணி, உரிமை கோரல்கள், மறுப்புரை பெறும் காலம், அறிவிப்புக் கட்டம் மற்றும் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு ஆகிய அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக கண்காணிப்பார்கள் என்று மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

<<<<>>>>

சத்தீஸ்கட், மத்தியப்பிரதேசம், ஒடிசா, பஞ்சாப், தெலங்கானா மாநிலங்களில் இன்று கடும்குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அசாம், மேகாலயா, உத்தரப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதி, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மற்றும் ஒடிசா மாநிலங்களின் சில பகுதிகளில் பனிமூட்டம் இருக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கட்டாக்கில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

5 போட்டிகளைக் கொண்ட தொடரில் இரு அணிகளும் பங்கேற்கின்றன.

<<<<>>>>

உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

இந்தியா, பிரேசில், ஸ்விட்சர்லாந்து, ஹாங்காங், தென்னாப்பிரிக்கா, கொரியா, மலேசியா, ஆஸ்திரேலியா, போலந்து, ஜப்பான், எகிப்து, ஈரான் ஆகிய 12 அணிகள் பங்கேற்கின்றன.

எக்ஸ்பிரஸ் அவென்யூ மற்றும் இந்தியன் ஸ்குவாஷ் அகாடமியில் இப்போட்டி நடைபெறுகிறது.

இந்தியா இன்று ஸ்விட்சர்லாந்தை எதிர்கொள்கிறது.

எக்ஸ்பிரஸ் அவென்யூவில் இப்போட்டி மாலை 6 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான இரண்டாவது ஹாக்கிப் போட்டி டிராவில் முடிவடைந்தது.

கேப்டவுனில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா 2 கோல் போட்டன.

3வது மற்றும் கடைசி போட்டி நாளை நடைபெறுகிறது.

<<<<>>>>

உலகக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் 9 முதல் 16வது இடத்திற்கான ஆட்டத்தில் இந்தியா இன்று உருகுவே-யை எதிர்கொள்கிறது.

<<<<The End>>>>